**கவனிக்க.**-*2022.07.08 ஆந் திகதிய 2288 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2289 - 2022 ජූලි මස 15 වැනි සිකුරාදා - 2022.07.15

*2289 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 220 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 221 |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம் சட்டமூலம் 2022, யூன் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, ஒகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


219 - B 082363 - 353 (2022/07)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் தணைக்களம்

இணைப்பு - 09

### காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*சப்பிரகமுவ மாகாண சபையின், கேகாலை மாவட்டத்தில், புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் ஜே. எம். ரம்யா ஜயசுந்தர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைகள் சட்டத்தின் 19(4) உப பிரிவின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1994.11.08 ஆம் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள கෑ/පු /7608 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹெனிலண்ட் குடியேற்றத்தில் வசிக்கும் ஞானவத்தீ புன்யவத்தீ விக்கரம ஆரச்சி அத்துகோரல என்பவருக்கு கையளிக்கப்பட்டு அவிஸ்லாவலை மாவட்ட காணிப் பதிவகத்தில் கா. ஆபி. கட். எஸ். 17/54 இன் கீழ் 1994.12.19 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்திற்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப் பத்திரத்தை, மேற்கூயிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2022.08.12 ஆம் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.*

#### மேற்குறித்த அட்டவணை

*கேகாலை நிருவாக மாவட்டத்தில் புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் பாத்த புலத்கம கோரலவில் பனாபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் பனாபிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் இருக்கின்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க களப்பத்திரத்தில் /- அவர்களினால் தயாரிக்கப்பட்ட ஆ.வ.கே. 1512 ஆம் இலக்க காணி துண்டு பிரிக்கும் வரைபடத்தில்/- அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்க எல்லைக் குறிப்பில் 110 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் 0.096 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்துமான, கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டதுமான அரச காணி: ஹெனிலண்ட் தோட்டம்.*

வடக்கு : காணித் துண்டு இலக்கம் 109;
கிழக்கு : காணித் துண்டு இலக்கம் 91;
தெற்கு : காணித் துண்டு இலக்கம் 112;
மேற்கு : ஆ. வ. ப 103/2111.

ஜே. எம். ரம்யா ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்/(மாகணங்களுக்கிடையிலான),
காணி ஆணையாளர்/உதவி காணி ஆணையாளர்.

பிரதேச செயலகம்,
புலத்கொஹுபிட்டிய,
2022, ஏப்பிறல் 26.

07- 153

---

## காணி ஆணையாளர் நாயகம் தணைக்களம்

இணைப்பு - 09

### காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*தென் மாகாண சபையின் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள அக்குறஸ்ஸ பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் கே. ஜீ. டீ. அனோஜா ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களால் 1984.09.05 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை/ப்ற/9144ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான உதளுக்ஹேன, அல்லே இஹல மாகெதர எனும் முகவரியில் வசிக்கும் வேவெல்வெல ஹேவகே ரத்னபால என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் L. D. O. 337 ஆம் இலக்கத்தின் கீழ் 2017.02.23 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்கு விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமக்கப்பப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த*

அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.08.12 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மேற் கூறிய அட்டவணை**

மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் அக்குறஸ்ஸ பிரதேசச் செயலாளர் பிரிவின் வெலிகம் கோரளையிலுள்ள மாரம்ப வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த லேனம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவை மாஅதிபர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 10 ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ - என்பவரால் தயாரிக்கப்பட்ட அ. க. பி. 535 இரேகை வரைதலில் 424 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 00 ஹெக்டயார் 00 ஏக்கர் 03 றூட் 22 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : அ. க. பி. 535 இல் 394 காணித்துண்டு;
கிழக்கு : அ. க. பி. 535 இல் 423, 432 காணித்துண்டு;
தெற்கு : அ. க. பி. 535 இல் 432, 429 காணித்துண்டு;
மேற்கு : அ. க. பி. 535 இல் 429, 425 காணித்துண்டு.

கே. ஜீ. பீ. அனோஜா,
பிரதேச செயலாளர்/
பிரதிக் காணி ஆணையாளர் (உள் மாகாண).

பிரதேச செயலகம்,
அக்குறஸ்ஸ,
2022, மாச்சு 14.

07 - 155

## நானாவித காணி அறிவித்தல்கள்

திருத்தம்
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் .

முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் 2022/05/13 ஆம் திகதி வர்த்தமானி அறிவிப்பு இல. 4/10/36605 இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

கிராம அலுவலர் பிரிவு: 167, பொத்குல் பகுதி
கிராமம்: பொத்குல் பகுதி

02. அந்த அறிவித்தலிலுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமடையாது.

கே. டி. பந்துள ஜயசிங்க,
காணி ஆணையாளர் நாயகம்.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2021, யூன் 22.

07-154

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/16/68035.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம். : என்சீபீ/பிஎல்சீ/எல்/10/4/2.

### முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டத்தின் கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலகப் பிரிவின் இல. 279, மஹாகலத்தேவ கிராம அலுவலர் பிரிவைச் மஹாகலத்தேவ கிராமத்தின் ஏ.ல.ஜீ. 254 வரைபடத்தின் துண்டு இல. 378 இன் ஒரு பகுதியைக் காண்பிக்கும் பொருட்டு வரையப்பட்ட 9452 இன் துண்டு இலக்கம் 01 இல் காண்பிக்கப்பட்டுள்ள அளவில் 6.8851 ஹெக்டெயர் கொண்ட அரச காணி துண்டை விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக திருமதி இரிப்புகே அமரா ரோகிணி என்பவர் குத்தகை கோரியிருப்பது பற்றி இத்தால் அறியத் தருகின்றேன்.

02. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :-

வடக்கு : எம். ஜீ. ஹேம்மாலாமெனிக்கே, எம். ஜீ. செனவிரத்ன, டப்ளிவ். ஏ. பிரேமசந்திர, கே. எம். எஸ். சமரகோன், கே. எம். எஸ். சாகரிகா சமரகோன், ஆகியோரின் காணி;

கிழக்கு : கே. எம். எஸ். சமரகோன், கே. எம். எஸ். சாகரிகா சமரகோன் மற்றும் ரீ. கே. ஏக்கனாயக்க ஆகியோரின் காணி;

தெற்கு : திலுக்ஷான் ஜயசிங்க, தெவின் ஜயசிங்க, டப்ளிவ். ஏ. ஜயமான்ன, எம். ஜீ. செனவிரத்ன ஆகியோரின் காணி மற்றும் வாவி ஒதுக்கிடம்;

மேற்கு : நெடுஞ்சாலை (பிரதேச சபை) மற்றும் எம் ஜீ. ஹேமமாலாமெனிக்கே இன் காணி .

03. கோரப்பட்டுள்ள காணியை உரிய காரணத்திற்காக குத்தகைக்கு விட முடியும். ஆதலால் சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கு கீழ்பட்டு காணியை குத்தகைக்கு விட அரசாங்கம் கருதுகின்றது.

(அ) **குத்தகை காலப்பகுதி** .-முப்பது (30) ஆண்டுகள் (2022.02.14 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகள் முன்நோக்கி);

**வருடாந்தக் குத்தகை.**- 2022 ஆம் ஆண்டின் காணி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 5 மில்லியன் தொகையைவிட குறைவடையும் சந்தர்ப்பங்களின் போது பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது ஆண்டில் காணியின் மேம்பாடற்ற பெறுமதியில் 2% ஆகும். 2022 ஆண்டின் காணி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5 மில்லியன் தொகையை விட அரிகரிக்கும் சந்தர்ப்பங்களின் போது பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது ஆண்டில் காணியின் மேம்பாடற்ற பெறுமதியில் 4%ஆகும். குத்தகை தொகையனது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை திருத்தப்பட வேண்டியுள்ளதுடன் முன்னைய 5 ஆம் ஆண்டின் இறுதியில் அளவிடப்பட்ட வருட குத்தகை தொகைக்கு 20% உம் சேர்க்கப்பட வேண்டும்.

தவணைப் பணம்: தவணைப் பணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகையாளரின் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் பிரதேச செயலாளர் திருப்தியுறும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் அக்காணி விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாகாது;

(ஈ) காணி குத்தகைக்கு விடப்பட்டுள்ள காலப்பகுதியில் குத்தகையாளரினால் காணியை பெற்றுக்கொண்ட விடயத்தை சிறப்பாக மேற்கொள்வதற்கு உரிய காலப்பகுதியினுள் முடியாதுவிடின் குத்தகையை முடிவுறுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்;

(உ) 2022.02.14 ஆம் திகதியிலிருந்து 5 ஆண்டுகளை தாண்டுவதற்குள் குடும்பத்தினுள் ஒப்படைத்தல் அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட விடயத்தை அடைந்து கொள்வது தொடர்பாக இடைக்கால குத்தகை அல்லது ஒப்படைத்தல் தவிர ஏனைய இடைக்கால குத்தகைக்கு விடல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக அனுமதி அளிக்கப்பட்மாட்டாது;

(ஊ) குத்தகை தொகை தொடர்ச்சியாக செலுத்த வேண்டியுள்ள துடன் குத்தகையை செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தம் தாமாகவே இரத்தாகும்;

வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆறு வார காலத்தினுள் குறித்த காணியை குத்தகைக்கு விட முடியாது என ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலம் எனக்கு சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் கோரிக்கைக்கு அமைய குத்தகைக்கு வழங்கப்படும்.

டீ. டீ. நவோத்யா சீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.04.22.

07-276